உ

ஸ்ரீராமஜெயம்

# திருமக்கோட்டை

# ஸ்ரீ ரெங்கனாதப்பெருமாள்

# தல வரலாறு.

இஃது
திருமக்கோட்டை ஸ்ரீ ரெங்கனாதப்பெருமாள் தேவஸ்தான
வெளியீடு.

எழுதியவர்:

**ப. இராமநாத பிள்ளை,**
தமிழ்ப் பண்டிதர், மன்னார்குடி.

---

**மன்னார்குடி 'பாரதி அச்சுக்கூடத்தில்'**
பதிப்பிக்கப்பெற்றது.

---

ஆண்டு, வைகாசித் திங்கள்
1953

110
OFFICE OF THE REGISTRAR OF BOOKS MADRAS
10 APR 1954
Q22:38 21193.T
N53
113755



THE REGISTRAR OF BOOKS
10 APR 1954
MADRAS

ஸ்ரீராமஜெயம்

திருமக்கோட்டை

# ஸ்ரீ ரெங்கனாதப்பெருமாள் தல வரலாறு.


இஃது
திருமக்கோட்டை ஸ்ரீ ரெங்கனாதப்பெருமாள் தேவஸ்தான
வெளியீடு.

எழுதியவர்:
**ப. இராமநாத பிள்ளை,**
தமிழ்ப் பண்டிதர், மன்னார்குடி.

மன்னார்குடி 'பாரதி அச்சுக்கூடத்தில்' பதிப்பிக்கப்பெற்றது.

விஜய ஆண்டு, வைகாசித் திங்கள்

**1953.**



கோவிலின் முற்புறத் தோற்றம்.

உ

ஸ்ரீராமஜெயம்.

# திருமக்கோட்டை ஸ்ரீ ரெங்கநாதஸ்வாமி தேவாலய வரலாறு.

கைம்மான மழகளிற்றைக் கடற்கிடந்த கருமணியை
கைம்மான மரகதத்தை மறையுரைத்த திருமாலை
எம்மானை எனக்கென்று மினியானை பனிகாத்த
அம்மானை யான் கண்டது அணிநீர்த்தி தன்னரங்கத்தே.


ஸ்ரீமன் நாராயணன் பக்தருடைய மன ஈடேற்றத்தின் பொருட்டும் பாபிகளின் பாபநாசத்தின் பொருட்டும் கருணை நிறைந்த திருவுள்ளத்தையுடையவராய் நாமெல்லாம் உச்சீவிக்க பலதிவ்ய தேசங்களில் எழுந்தருளி சேவை சாதித்தருளுகிறார். அத்தகைய திவ்ய தேசங்கள் பல நிறைந்தது நமது சோழ மண்டலமே. ஆழ்வார்களால் மங்களா சாசனம் பண்ணியருளப்பட்ட திவ்ய தேசங்கள் சில. அவற்றுள் திருவரங்கம் பெரிய கோயில் என்பது மிகச்சிறந்த திவ்ய தேசமாகும். பாகவதர்கள் ஸ்ரீ ரெங்கநாதனை வழிபடுவதற்கு ரெங்கநாதனை பல இடங்களில் எழுந்தருளப்பண்ணி சேவித்து இகபர சாதனங்களை பெற்றிருக்கிறார்கள். அப்படிப்பட்ட திவ்ய தேசங்கள் ஆதிரங்கமென அழைக்கப்படுகின்றன. இங்கு அரங்கநாதர் சயன திருக்கோலம் கொண்டு எழுந்தருளியிருக்கின்றார். இத்தகைய காட்சியை "அரவணைத்துயிலுமா கண்டு உடல் எனக்கு உருகுமாலோ", என்று ஆழ்வாருடைய மனம் கரைந்திருக்கின்றதன்மையை நாம் கனிந்து நோக்க வேண்டும். அத்தகைய ஆதிரங்கத்துக்கு சுமார் ஒன்றரை காதத்தி

னும் ராஜகோபாலப்பெருமாள் எழுந்தருளியுள்ள ராஜ மன்னார்குடிக்கு ஒரு காத தூரத்திலும் ஸ்ரீ ரெங்கனை நுடைய ஞாபகார்த்தமாக பிரதிஷ்டை செய்யப்பட்ட தலம் திருமக்கோட்டை என்பதாகும். இது ஆழ்வார் களால் மங்களா சாசனம் பெருதது. இருந்தாலும் மிகப்பழமையானது.

இத்தலம் தஞ்சாவூர் ஜில்லாவிலே மன்னார்குடி தாலுகாவிலுள்ளது. ராஜமன்னார்குடி ரயிலடியிலிருந்து முத்துப்பேட்டை செல்லும் வழியில் பத்தாவது மைலி லுள்ளது. அவ்வாறே முத்துப்பேட்டையிலிருந்தும் ராஜமன்னார்குடிக்குச் செல்லும் வழியில் சுமார் 12வது மைலிலுள்ளது. சாலை மட்சாலை. எல்லாக் காலங் களிலும் வண்டிப் போக்குவரத்துக்கு ஏற்றது. வண்டி வசதிகள் ஏராளமாகக் கிடைக்கும். ஷை சாலை திருக் கோவிலின் மேல வீதியாய் அமைந்திருக்கிறது. திருமேனி ஏரி, திருமேனி ஆறு முதலிய நீர்வசதிகள் மிகுதியும் உண்டு. சீதோஷ்ண ஸ்திதி 98°. மக்கள் தொகை சுமார் 3000 இருக்கும். இங்குள்ளவர்கள் பெரும்பாலும் விவசாயிகளே. சிறுபான்மை பாய் பின்னல் தொழில் நடைபெறுகிறது யாத்திரையாக வரும் பாகவதர்களுக்கு தங்குமிட வசதிகள் மிகுதியாக இருக்கின்றன. வேறு சத்திரம் சாவடிகள் இல்லை.

கோயில்:—

மிகச் சிறிய கோயில் மொட்டைக் கோபுரமே யுள்ளது. கோவிலின் நீளம் 185' அகலம் 110' அடி கள். திருவீதி மடவிளாகம் உட்பிராகாரம் சேர்த்து மூன்று பிராகாரங்களுள்ளன. கோவிலின் உள்நுழைந் ததும் பட்சிராஜாவாகிய பெரிய திருவடி இடைவிடா



ஸ்ரீ ரெங்கனாதர் சன்னதி, தாயார் சன்னதி, கருட மண்டபம் முதலியன.

சேவையில் எழுந்தருளி இருக்கிறார். அவரை வழிபட்டு உள்நோக்கினால் கண்கள் கண்டார் மனம் கரைக்கும் வண்ணப் பெருமாள் ஸ்ரீ ரெங்கனாதரைக் காணும். ஸ்ரீ ரெங்கனாதர் நின்ற திருக்கோலம். ஸ்ரீதேவி, பூதேவி இருவரும் எழுந்தருளியிருக்கிறார்கள். இக்காட்சி "மின்னுக் கொடியுடுத்து விளங்கி வில்பூண்டு நன்நிற மேகம் நின்றதுபோல" என்னும் இயற்கையழகை அடியார்கள் மனத்து ஆக்கும். கண்டவர்கள் மனத்தில் நீலமேனி குடிகொண்டருளும். அம்மூலவருக்கு முன்பு காண்பார் கண்ணும் மனமும் கவரத்தக்க அழகோடு ஸ்ரீ தேவி, பூதேவி சமேதராக திருவரங்கனாதர் உற்சவ ராக எழுந்தருளி இருக்கிறார். அலங்காரப் பிரியரான பெரிய பெருமாள் நித்திய மணவாள கோலத்தோடு சேவை சாதித்தருளுகிறார். பக்கத்தில் நவநீத கிருஷ்ண னும் செல்வரும் எழுந்தருளியிருக்கின்றார்கள். சந்நிதி கிழக்குப் பார்த்தது. பெருமாள் எழுந்தருளியிருக்கும் விமானம் ஸ்ரீரங்க விமானமாகும். மகா மண்டபத்தில் கிழக்கு முகமாக நம்மாழ்வார் திருமங்கையாழ்வார் திருக்கச்சி நம்பி, பெரியாழ்வார், சேனைமுதலியார், பீஷ்வக்சேனர் முதலிய ஆழ்வார்கள் சேவை சாதித் தருளுகிறார்கள். சேனை முதலியாருக்கு பக்கத்தில் தெற்குத் திருமுகமாக ஸ்ரீநிவாஸப்பெருமாள் எழுந்த ருளியிருக்கிறார். அவருக்குப் பக்கத்தில் விபீஷ்ணாஷ்வார் விளங்குகிறார். தெற்கு பிராகாரத்தில் கன்னிமூலையில் தாயார் சந்நிதி. தாயாருக்கு ரெங்கநாயகி என்பது திருநாமம். மூலவருக்கு முன்னிலையில் உற்சவத்தாயா ரும் விளங்குகிறார். வடகிழக்குகோடி வசந்த மண்ட பத்தில் சிறிய திருவடியாகிய அநுமார் இரண்டு திருவுரு

வங்களாக விளங்குகிறார். ஒன்று அநுமாருடைய பாலநிலை. மற்றொன்று வீரநிலை.

சுற்றுக் கோவில்:—

கிராம தேவைகளான மாரியம்மன், பிடாரி, ஹரி கரபுத்திரர் முதலிய கோவில்களும் உரிய இடங்களில் அமைந்திருக்கின்கன. திருப்பணி மிகப் பழமையான தும், சிறியதாகவுமிருப்பதால் சித்திர சிற்பச் சிறப்பு களில்லை. கருடவாஹனம் ஒன்று மட்டும் இருக்கிறது. சுமார் நூறு ரூபாய் பொருமானமுள்ள வெள்ளிக் கிரீடம், கவசம், ஹஸ்தம் முதலியன இருக்கின்றன.

புராண வரலாறு:—

திருமாலுடைய சிறந்த அவதாரமாகிய ராமாவதார காலத்தில் நடந்து காட்டிய நாராயணன் பிதுர் வாக்ய பரிபாலனம் செய்யும் பொருட்டு தேரடைந்தசோலை திருநாட்டை பரதாழ்வான் ஆளக்கொடுத்து பிராட்டி யாரும் திருத்தம்பியும் பின்தொடர கானடைந்த காகுத்தன் பல இடங்களில் எழுந்தருளி தென்திசை வாழவந்தவர் திருமக்கோட்டை என்னும் திவ்ய தேசத்தை அடைந்தார். இங்கு ரெங்கநாதரை எழுந்தருளப்பண்ணி சேவித்தார். இதே ரெங்க நாதனே ராவண சம்காரம் செய்து ஸ்ரீ ராமன் அயோத்திக்கு எழுந்தருளிய பிறகு விபீஷணாழ்வார் இராமனுடைய பக்தி பரவசத்தால் அவருடைய திருப் பாதங்கள் தோய்ந்த இடங்கள்தோறும் சென்று சேவிக்க சிந்தை செய்தவராய் பல திவ்ய தேசங்களையும் தெரிசித்துக்கொண்டு வருகிறவர் இதனையடைந்தார். ஸ்ரீ இராமன் வழிபட்ட ரெங்கநாதன் என்றறிந்ததும்

நித்ய சேவை செய்ய எண்ணி பகவத் பக்தியில் ஈடு பட்டு திருவாராதனை செய்துவந்தார். ஆராதனைக் குகந்த அரங்கநாதர் விபீஷணாழ்வாருக்கு பிரத்யக்ஷமாகி "நீ சிரஞ்சீவிகளில் எண்மருள் ஒருவராக இருப்பாயாக என்று அனுக்ரகித்தார். விபீஷணன் மீண்டும் நமஸ் கரித்து எழுந்து நிற்க அவனுள்ளப்பாங்கை அறிந்த திருவரங்கநாதர் என்ன வேண்டுமென்று கேட்டருள, விபீஷணன் தேவரீர் அடியேனுக்கு பிரத்யக்ஷமானது போல ஆராதனைக்கு வருகின்ற பக்தர்கள் அனை வருக்கும் பிரத்யக்ஷமாக வேண்டும், சேவைசாதித்து அருளவேண்டும் என்று உபய பாதங்களையும் கரத்தால் பிடித்துக்கொண்டு வேண்டினார். அது முதல் பகவானும் வரப்பிரசாத மூர்த்தியாய் நின்று காட்சி யளிக்கின்றார். அநேக சோழ மகாராஜாக்கள் ஆரா தித்து மான்யங்களும் விட்டு கைங்கர்ய பரர்களாய் விளங்குகிறார்கள் என்பதும் அறியப்படுகிறது.

சித்திராப் பௌர்ணமியில் கருடசேவையும், ஆடி ரேவதியிலும், வெள்ளிகளிலும் தாயார் புறப்படும். ஆவணி ஸ்ரீ ஜெயந்தியும் புரட்டாசி நவராத்திரி உற்சவ மும், கார்த்திகையில் திருக்கார்த்திகை உற்சவமும் மார்கழியில் வைகுண்ட ஏகாதசியும் தை வெள்ளிகளில் தாயார் புறப்பாடும் பங்குனி உத்திரத்தில் தாயார் புறப் பாடும் கோவிலுக்கு ஏற்ற திட்டப்படி நடந்து வரு கின்றது. வேறு அர்ச்சனை அபிஷேகங்கள் பக்தர்கள் அவ்வப்போது செய்வதைவிட நிலைத்தனவாக இல்லை.

ஸ்ரீ ரெங்கனாதபெருமாள் கோவிலுக்குச் சொந்தமாய் நஞ்சை ஏக்கர் 170ம், புஞ்சை ஏக்கர் 450ம், ஆக நஞ்சை, புஞ்சை 620 ஏக்கர் இருக்கிறது.

## 1361ம் பசலி வரவு செலவு கணக்கு.

### வரவு

| | ரூ. அ. ப. |
|---|---|
| ஆரம்ப இருப்பு ரொக்கம் ... | 1047—4—5 |
| பாங்கு இருப்பு ... ... | 15436—0—10 |
| நெல் விலையால் ... ... | 556—15—4 |
| நில சம்பந்தமான வருமானம் ... | 14418—7—11 |
| தோப்பு வருமானம் ... ... | 1102—2—0 |
| மோஹினி ... ... | 16—9—6 |
| வட்டி ஆதாயம் ... ... | 320—9—2 |
| டிக்கிரி வருமானம் ... ... | 82—14—0 |
| இதர வருமானம் ... ... | 824—13—6 |
| ஆக. | 33805—12—8 |

### செலவு

| | | ரூ. அ. ப. |
|---|---|---|
| ஆபீஸ் சம்பந்தமான சம்பளம் வகையரு ... | | 2921—8—9 |
| ஆராதனை சிலவு ... | | 933—7—1 |
| மாசாந்திர ஏறுபடிகள் ... | | 361—9—9 |
| அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் ... | | 3136—0—0 |
| நிலம் சம்பந்தமான சிலவு & உற்பத்தி சிலவு | | 3491—0—0 |
| கட்டிடம் ரிப்பேர் சிலவு ... | | 49—3—0 |
| சர்க்கார் கிஸ்தி ... | | 2640—0—6 |
| வாகனுதி அங்கங்கள் ... | | 1219—14—11 |
| கல்வி சமயம் ... | | 25—14—0 |
| போர்டு பீஸ் & ஆடிட் பீஸ் ... | | 617—1—0 |
| கோர்ட்டு சிலவு ... | | 49—10—0 |
| சில்லரை சிலவுகள் ... | | 511—5—3 |
| திரும்ப வரக்கூடிய கடன் ... | | 1000—0—0 |
| கடைசி இருப்பு Cash | 859—10—0 | |
| கடைசி இருப்பு Bank | 15533—11—1 | |
| கடைசி இருப்பு Paddy | 455—13—4 | |
| | 16849—2—5 | 16849—2—5 |
| ஆக. | | 33805—12—8 |

நிர்வாஹம்:—

சென்னை H. R. E. போர்டார் அவர்கள் 57வது சட்டபடி திட்டம் (scheme) B. O. 2746 Dt. 27—8—45ல் வகுத்துள்ளார். அதன்படி ஒரு நிர்வாக உத்தியோக மூன்று தருமகர்த்தாக்களும் இருப்பார்கள்.

இலக்கியம்:—

பாடல்கள் ஒன்றுமில்லை. ஆச்சாரியர்களால் அபிமானிக்கப்பட்ட ஸ்தலமாகவே இருக்கின்றது.

ஆதலால் ஜென்ம சாகரத்திலிருந்து ஈடேற எண்ணி பகவத் அனுக்ரகத்தால் கிஞ்சித் ஞானம் கைவரப் பெற்ற ஆத்மாக்கள் கலியுக வரதராக கண்கண்ட தெய்வமாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீதேவி, பூதேவி சமேத ஸ்ரீ ரெங்கநாதனுடைய திவ்யானுக்ரகத்துக்கு பாத்திரர்களாகும்படி வேண்டிக்கொள்ளுகிறோம்.

---

உம்பராலறிய லாகா ஒளியுளார் ஆனைக்காகி
செம்புலாலுண்டு வாழும் முதலைமேல் சீறிவந்தார்
நம்பரமாயதுண்டே? நாய்களோம் சிறுமையோரா
எம்பிராற்காட் செய்யாதே என் செய்வான் தோன்றினேனே!

தொண்டரடிப்பொடியாழ்வார்.

---

## திருவரங்கப்பெருமாள் கோயில் கல்வெட்டுக்களைப் பற்றிய செய்திகள்.

இக் கோயில் கல்வெட்டுக்கள் தொடர்பின்றிச் சிறு சிறு துண்டு கற்களில், கோயிலின் பற்பல இடங்களில் வைத்துக் கட்டப்பட்டுள்ள. பற்பல ஆண்டுகளுக்கு முன் கோயில் ஜீரணமாய் இருந்த நிலையில் அதைப் புதிப்பிக்க வந்தவர்கள் கல்வெட்டுக்களின அருமை பெருமைகளை உணராது, அவைகள் அடங்கிய கல் துண்டுகளைப் பற்பல இடங்களில் வைத்துக் கட்டி இருத்தல் வேண்டும். அந்தத் துண்டுகளில் காணப் பெற்ற கல்லெழுத்துக்களை, கல்வெட்டுத் துறையாளர் படியெடுத்துச் சென்று அவைகளின் சுருக்கங்களை 1917-ஆம் ஆண்டின் கல்வெட்டு அறிக்கையில் குறித்து உள்ளனர் (Annual report on South Indian Epigraphy for the year ending March 1917 Numbers 268 to 272) அவைகள் மாறவர்மன் குலசேகர பாண்டியன் காலத்தில், திருவரங்கப் பெருமாளுக்கு, நரசிங்கராய நாய்க்கர் என்பவர் நித்திய நைமித்தியங்களுக்கு நிலம் அளித்ததையும்; விசயநகர அரசன் காலத்தில் தொண்டை மண்டலத்தார் ஒருவர் அரசன் பேரால் நிலம் கொடுத்ததையும்; மன்மத வருடம் மாசி மாதம் இருபதாம் தேதியில் திருமலைச் செட்டியார் திருவரங்கப்பெருமாளுக்குப் புதிதாக தேர் ஒன்றைச் செய்வித்து விழா நடத்துவதற்குப் பொருள் அளித்ததையும் குறிப்பிடுகின்றன.

---

பாரதி பிரஸ், மன்னார்குடி. Or. 8258 C. 300.

## பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 5 | 21 | ஏகாததி | ஏகாதசி |
| 7 | 4 | உத்தியோக | உத்தியோகஸ்தரும் |

7B
8-56